TAMIL NADU LEGISLATURE LIBRARY
29 AUG 1978
MADRAS

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

சனிக்கிழமை, 1978 பிப்ரவரி 25.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் காலை 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Poigai Channel, Kanyakumari district.

*131 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government that the crossbar constructed across the Poigai Channel at Aralvoimozhi, Kanyakumari district, has been broken and that the Minister for Finance be pleased to state—

(b) if so, the action taken thereon;

(c) whether it has been brought to the notice of the Government that several thousands of acres of lands are without irrigation facilities and consequently remain uncultivated, since the broken portion has not been set right; and

(d) the action taken thereon ?

பொய்கைக் கால்வாய், கன்னியாகுமரி மாவட்டம்.

திரு. எம். சங்காலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய் மொழியில் உள்ள பொய்கைக் கால்வாயில் குறுக்கே கட்டப்பட்டிருந்த "கிரஸ்பார்" உடைக்கப்பட்டு, அதில் உள்ள செப்புத்தகடுகள் திருடப்பட்டது. அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

(உ) உடைக்கப்பட்ட பகுதி சீர் செய்யப்படாமையால் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள், பாசன வசதியின்றி விவசாயம் செய்யப்படாமல் பாதிக்கப்பட்டு விட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(எ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) ஆம்.

(இ) இது சம்பந்தமாக ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் குற்ற எண் 550/77-ல் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டு புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

(உ) (எ) குறுக்குத் தடுப்பு முற்றிலும் உடைக்கப்படாததால் நிலங்கள் எதுவும் பாசன வசதியின்றி பாதிக்கப்படவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : இந்த 'கிராஸ் பார்' உடைக்கப்பட்டது எப்போது? வழக்கு பதிவு செய்யப்பட்டது எப்போது? வழக்கு குறித்த சார்ஜ் ஷீட் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இது சம்பந்தமாக யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அந்தக் குறிப்புகள் என்னிடம் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், அந்தக் குறிப்புகளைச் சேகரித்துத் தருகிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : இது சம்பந்தமான வழக்கு பதிவு செய்யப் பட்டதே தவிர, சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவில்லை என்ற தகவல்தான் என்னிடம் இருக்கிறது. எனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் காவல் துறைக்கு அறிவுறுத்தி, வழக்கை விரைவுபடுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து, உடைந்த பகுதியின் காரணமாக பெருமளவு நிலங்கள் பயிரிடப்படாத நிலை இல்லாமல் இருந்தாலும், ஒரு பகுதி வரவேண்டிய தண்ணீர் வராமல் இருக்கிறது. எனவே உடைப்பைச் சரி செய்வதற்கு உடனடியாக உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்று நான் என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன். குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அடுத்து, உடைப்பு பெருமளவுக்கு இல்லாத காரணத்தால், பாசனம் அதிகமாக பாதிக்கப்படவில்லை என்று எனக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. அப்படி ஏதேனும் பாதிப்பு இருந்தால், அந்த உடைப்பை அடைப்பதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*132 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal with the Government to enact comprehensive land reforms in the State; and

(b) if so, the details thereof?